செ.வெ.எண்.27

நாள்.08.04.2017.

திருநெல்வேலி டவுண் கல்லணை மகளிர் அரசு மேல்நிலைப்பள்ளியில், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் மூலம் உதவி இயக்குநர் கைத்தறி பதவிக்கான தேர்வு மையத்தினை மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர் மு.கருணாகரன்,இ.ஆ.ப., அவர்கள் நேரில் சென்று, பார்வையிட்டு ஆய்வு செய்தார்கள்.

-------

திருநெல்வேலி டவுண் கல்லணை மகளிர் அரசு மேல்நிலைப்பள்ளியில், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் மூலம் உதவி இயக்குநர் கைத்தறி பதவிக்கான தேர்வு இன்று (08.04.2017) நடைபெற்றது. தேர்வு மையத்தினை மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர் மு.கருணாகரன்,இ.ஆ.ப., அவர்கள் நேரில் சென்று, பார்வையிட்டு ஆய்வு செய்தார்கள்.

அப்போது, மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் தெரிவித்ததாவது–

திருநெல்வேலி மாவட்டத்தைச் சேர்ந்த 398 தேர்வாளர்கள் தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் மூலம் நடத்தப்படும் உதவி இயக்குநர் கைத்தறி பதவிக்கான தேர்வு எழுத விண்ணப்பித்திருந்தனர். இத்தேர்வு டவுண் கல்லணை மகளிர் அரசு மேல்நிலைப்பள்ளியில் நடைபெறுகிறது. காலையில் 214 தேர்வாளர்கள் தேர்வு எழுதுகின்றனர். 184 தேர்வாளர்கள் தேர்வு எழுது வரவில்லை. தேர்வு நடைபெறும் மையங்களில் தேவையான அடிப்படை வசதிகள் செய்யப்பட்டுள்ளது என மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர் மு.கருணாகரன்,இ.ஆ.ப.,அவர்கள் தெரிவித்தார்கள்.

ஆய்வின் போது, தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணைய துணை செயலாளர் திரு.இரா.முருகன், பிரிவு அலுவலர் திரு.பாலசுப்பிரமணியன், திருநெல்வேலி வட்டாட்சியர் திரு.பாலமுருகன் மற்றும் அலுவலர்கள் உடனிருந்தனர்.

வெளியிடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், திருநெல்வேலி.